**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.II, திண்டுக்கல்**
**2026ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் புதன்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 598/2014**
**CNR.No. TNDG03-000574-2014**

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம்
திண்டுக்கல்
குற்ற எண்.578/2014
சட்டப்பிரிவுகள் 324, 506(ii) of IPC

... குற்ற முறையிடுபவர்

// எதிர் //

சிலுவைமுத்து, (43/2014),
த/பெ. சூசை,
112-A, கிழக்கு ஆரோக்கியமாதா தெரு,
திண்டுக்கல். ...எதிரி

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 598 of 2014 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub Inspector of Police<br>Town North Police Dindigul in Cr.No. 578/2014 |
| 3. | Name of the accused | Siluvaimuthu |
| 4. | Father’s Name | Soosai |
| 5. | Occupation | - |

<table>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">112-A East Arockiyamatha Street, Dindigul.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">43/2014</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">01.10.2014</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">01.10.2014<br>10.12.2014</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">01.10.2014</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">12.11.2014</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C.</td><td colspan="3">05.10.2015</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 19.10.2015 the accused questioned on substance of accusation U/s. 324, 506(ii) of IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>18.01.2016</td><td>18.01.2016</td></tr>
<tr><td>PW2</td><td>18.01.2016</td><td>18.01.2016</td></tr>
<tr><td>PW3</td><td>18.01.2016</td><td>18.01.2016</td></tr>
<tr><td>PW4</td><td>18.01.2016</td><td>18.01.2016</td></tr>
<tr><td>PW5</td><td>24.08.2026</td><td>24.08.2026</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">31.08.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, எதிரியின் மீதான இதச பிரிவுகள் 324, 506(ii) of IPC–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E-Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கு கடந்த 10.12.2014ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.598/2014 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஜெயசீலன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 01.10.2014ம் தேதி 13.15 மணிக்கு திண்டுக்கல் கிழக்கு ஆரோக்கியமாதா கோவில் தெருவில், புகார்தாரரின் மாட்டுக்கறி கடை முன்பு, புகார்தாரருக்கும், புகார்தாரரின் சகோதரரான எதிரிக்கும் 2 ஆண்டுகாலமாக இருந்த இடப்பிரச்சனை

குறித்து முன்பகை காரணமாக, புகார்தாரரை எதிரி இங்கே கடை நடத்தக்கூடாது, கடையை உடனே காலிசெய் என்றும், இடப்பிரச்சனை முடித்து, பின் கடை நடத்து என்று கூறி திடீரென்று தான் வைத்திருந்த பிளேடால், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறி புகார்தாரரின் கழுத்தின் நடுவில் அறுத்து இரத்தக்காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 324, 506(ii)இதச படி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டை குறித்து வினவுதல்:

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 05.10.2015 அன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 324, 506(ii) இதச–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பு சாட்சிகள்**

3. அரசு தரப்பில் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி தனது சகோதரர் என்றும், தற்பொழுது தானும் தனது சகோதரரும் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், தான் கொடுத்த புகாரின் பேரில் மேல் நடிவடிக்கை தேவையில்லை என்றும், தான் கொடுத்த சமாதான மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அதை தான் படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்ததாகவும், புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், புகார் அ.சா.ஆ.1 என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அவரது சாட்சியத்தில் அ.சா.1ஐத் தெரியும் என்றும், எதிரியைத் தெரியும் என்றும், தான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவம் நடக்கும்போது சம்பவ இடத்தில் இல்லை என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 அவரது சாட்சியத்தில் அ.சா.1 தனது கணவர்

என்றும், ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும் என்றும், அ.சா.1ம் எதிரியும் தற்பொழுது சமாதானமாக சென்றுவிட்டார்கள் என்று', எதிரி மீது அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்றும், சமாதான மனுவில் தன் கையொப்பம் செய்ததாகவும், சமாதானமனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2 என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

7. இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 அவரது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் கையொப்பம் அ.சா.ஆ.3 என்றும், எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தனக்குத் தெரியாது என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

8. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 01.10.2014ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று 14.15 மணிக்கு அரசு மருத்துவமனை சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செபஸ்டியான் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று 14.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.578/2014 சட்டப்பிரிவுகள் 324, 506(ii) இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார் என்றும், பின்பு மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் திரு.பக்தவசலம் அவர்கள் பார்வைக்கு சமர்ப்பித்துள்ளார் என்றும், அதன் பின்பு சார்பு ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 15.30

மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் உபகாரசாமி, விக்டர் டேவிட் என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து கையொப்பம் பெற்று பின்பு சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், அதன் பின் சாட்சிகள் 1.செபஸ்தியான், 2.ஜெகநாதன், 3.ஜோஸ்வின் செல்வகுமாரி விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், எதிரியை தேடிவந்த நிலையில் அன்றையதினமே 17.00 மணிக்கு வழக்கின் எதிரி அனுமந்தநகர் ரயில்வே கேட் அருகில் இருந்த பிள்ளையார் கோவில் முன்பு நின்றிருந்த இவ்வழக்கின் எதிரி சிலுவை முத்துவை காரணம் கூறி கைது செய்து 17.30 மணிக்கு நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்பு வழக்கில் காயச்சான்று வழங்கிய டாக்டர் ஐவான் மோசஸ் அவர்கள் 04.10.2014ம் தேதி சிகிச்சையில் இருந்த வாதிக்கு தலைமறைவாக சென்றுவிட்டார் என்று No Definite opinion என சான்று பெற்றும் சான்று வழங்கிய மருத்துவரை விசாரித்தும் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்பு 30.10.2014ம் தேதி வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 324, 506(ii) இதசன் படி குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.8 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**V.எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்**

9. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்டபின்பு எதிரிக்கு பாதகமான அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியங்களை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 20.05.2026 நாளன்று தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார். அத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

**VI. வாதுரைகள்:**

**1. அரசு தரப்பில்:**

10. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் புகார்தாரரின் கழுத்தில் எதிரி பிளேடால் அறுத்து சாதாரண காயம் ஏற்படுத்தினார் என்று மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் மூலமும், சாட்சிகள் அளித்த சாட்சியங்களின் மூலமும் அரசு தரப்பு குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**2. எதிரி தரப்பில்:**

11. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக எந்த சாட்சியமும் இல்லை என்றும், எதிரி

தாக்கியதாக சொல்லப்படும் பிளேடை இவ்வழக்கில் அத்தாட்சியில் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றும், எதிரிக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும், கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை:**

12. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**VII. தீர்வு:–**

13. அரசு தரப்பு வழக்கானது, கடந்த 01.10.2014ம் தேதி 13.15 மணிக்கு திண்டுக்கல் கிழக்கு ஆரோக்கியமாதா கோவில் தெருவில், புகார்தாரரின் மாட்டுக்கறி கடை முன்பு, புகார்தாரருக்கும், புகார்தாரரின் சகோதரரான எதிரிக்கும் 2 ஆண்டுகாலமாக இருந்த இடப்பிரச்சனை குறித்து முன்பகை காரணமாக, புகார்தாரரை எதிரி இங்கே கடை நடத்தக்கூடாது, கடையை உடனே காலிசெய் என்றும், இடப்பிரச்சனை முடித்து, பின் கடை நடத்து என்று கூறி திடீரென்று தான் வைத்திருந்த பிளேடால், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறி புகார்தாரரின்

கழுத்தின் நடுவில் அறுத்து இரத்தக்காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 324, 506(ii)இதச– ன் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

14. மேற்படி குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்று பார்க்கும்முன் இதச பிரிவு 324–ன் அகக்கூறுகளைப் பார்க்கவேண்டியுள்ளது.

i. இதச பிரிவு 324ன் கீழ் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டுமென்றால், ஒருவருக்கு காயத்தை உண்டாக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தோடு மற்றும் தீய செயலால் ஒருவருக்கு சாதாரண காயத்தையோ, அல்லது ஆபத்தான ஆயுதத்தைக் கொண்டோ கொடுங்காயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் அல்லது தனது தீய செயலால் பிறருக்கு சாதாரண காயம் ஏற்படும் என்று தெரிந்திருக்கவேண்டும்.

ii. மேற்படி காயமானது எதிரியினால் ஏற்பட்டது என்று நிரூபித்தல் வேண்டும்.

15. இவ்வழக்கின் சாட்சியங்களைப் பரிசீலனை செய்யும்போது, புகார்தாரரின் உடலுக்கு காயங்களோ அல்லது வலியோ ஏற்பட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலனை செய்யும்போது, அதில் "இந்த இடத்தில் கறிக்கடை நடத்தக்கூடாது, கடையை உடனே காலிசெய், என்றும், இடப்பிரச்சினையை முடித்து, பின் கடை நடத்து என்று சத்தம்போட்டுக்கொண்டே திடீரென்று, தான் வைத்திருந்த பிளேடால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறி புகார்தாரரின் கழுத்தின்

நடுவில் அறுத்துவிட்டான்" என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.7 ஆன முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்யும் போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன.

16. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தைப் பரிசீலனை செய்யும் போது, சம்பவமானது அரசு தரப்பால் சொல்லப்படும் இடத்தில் தான் நடந்துள்ளது என்று தெரிய வருகிறது. இருப்பினும், புகார்தாரர் தனது புகாரில் குறிப்பிட்டது போல், எதிரி தான் பிளேடால் புகார்தாரரின் கழுத்தில் அறுத்து காயத்தை ஏற்படுத்தினாரா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.8 ஆன விபத்து பதிவேட்டை பரிசீலனை செய்யும் போது, அதில் புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

17. ஆகவே, அவ்வாறு காயம் ஏற்பட்டுள்ளபோது, மேற்படி காயம் எதிரியால் தான் ஏற்பட்டது என்று அரசு தரப்பிலிருந்து நிரூபிக்க வேண்டும். அவ்வாறு அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் காயம்பட்ட நபரான அ.சா.1 தனது புகாரில் எதிரியை அடையாளம் காட்டி குறிப்பிட்டுள்ளது. ஆனால், தனது முதல் விசாரணையில், "ஆஜர் எதிரி தனது சகோதரர் என்றும், தற்பொழுது தானும் தனது சகோதரரும் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், தான் கொடுத்த புகாரின் பேரில் மேல் நடிவடிக்கை தேவையில்லை" என்றும், சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, எதிரி தன்னை பிளேடால் தாக்கியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, எந்தவொரு சாட்சியமும்

அளிக்காதபோது, புகாரின் உண்மைத் தன்மையில் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

18. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, எதிரியின் குற்றச் செயலை உறுதியூட்டும் வகையில் எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எதிரி குற்ற நிகழ்விற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் பிளேடை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரி குற்றச் செயலில் ஈடுபட்டார் என்று கருத இயலாது.

19. மேலும், மேற்சொன்னவாறு இவ்வழக்கில் வேறு கண்ணுற்ற சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதாலும், மேலும், புகார்தாரர் தனது முதல் விசாரணையில் "தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிக்கொண்டேன். இவ்வழக்கை மேல் நடத்தவிரும்பவில்லை" என்று சாட்சியம் அளித்துள்ளபோது, எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. முடிவாக, எதிரியின் மீதான இதச பிரிவுகள் 324, 506(ii) of IPC–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து,

கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

21. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. சொத்துக்கள் பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

22. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09–ம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.09.09 17:48:02 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | செபஸ்தியான்<br>த/பெ. சூசை | 18.01.2016 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | ஜெகநாதன்<br>த/பெ. சின்ராஜ் | 18.01.2016 | – |
| 3. | அ.சா.3 | ஜோஸ்பின் செல்வகுமாரி<br>க/பெ.செபஸ்தியான் | 18.01.2016 | அ.சா.ஆ.2 |
| 4. | அ.சா.4 | உபகாரசாமி<br>த/பெ. உபகாரம் | 18.01.2016 | – |
| 5. | அ.சா.5 | பிரபாகரன்<br>த/பெ. செல்லப்பாண்டி | 24.08.2026 | அ.சா.ஆ.3<br>முதல்<br>அ.சா.ஆ.8 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 01.10.2014 | புகாரில் உள்ள கையொப்பம் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.3 | 01.10.2014 | புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 01.10.2014 | பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.5 | 01.10.2014 | புகார் வாக்குமூலம் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.5 | 01.10.2014 | பார்வை மகஜர் |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.5 | 01.10.2014 | மாதிரி வரைபடம் |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.5 | 01.10.2014 | முதல் தகவல் அறிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.5 | 01.10.2014 | விபத்து பதிவேடு |

**III. <u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

**IV. <u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.09.09 17:48:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**<u>குறிப்பு</u>**

1. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.